பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

02 11 2025 SUNDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1. இஸ்ரோவின் CMS-03 செயற்கைக்கோள் LVM-3 ராக்கெட் மூலம் இன்று மாலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

2. தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகளை மேற்கொள்வதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதென திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் பங்கேற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. மக்களின் கவனத்தை திசை திருப்பவே வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகளுக்கு எதிராக திமுக செயல்படுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

4. வங்கக்கடலில் இன்று காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள்

<<<<<>>>>>

இஸ்ரோவின் CMS-03 செயற்கைக்கோள் LVM-3 ராக்கெட் மூலம் இன்று மாலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்தீஷ்தவான் விண்வெளி மையத்தில் இருந்து மாலை மணி 5.26-க்கு இது விண்ணில் செலுத்தப்பட்டது.

அதிக எடை கொண்ட இந்த செயற்கைக்கோளை புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இஸ்ரோ விண்ணில் செலுத்தியுள்ளதாக இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஷ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – த வி – 64 Sec.)*

<<<<<>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகளை மேற்கொள்வதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதென திமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இன்று சென்னையில் திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற பல்வேறு கட்சித்தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரச்சினை தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பு வெளிவாராத நிலையில் இப்பணிகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் முடிவு செய்திருப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தேர்தல் ஆணையம் இப்பணிகளை கைவிட வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம் இந்த கருத்துக்களை ஏற்காததால் உச்சநீதிமன்றத்தை நாடுவதை தவிர வேறு வழியில்லை என்றும் அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் திமுக, அதன் கூட்டணி கட்சிகளும், தேமுதிக உள்ளிட்ட பல்வேறு கட்சிகளும் பங்கேற்றன.

அஇஅதிமுக, பிஜேபி, பாமக, தவெக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் இக்கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இதற்கிடையே, மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அனைத்துக்கட்சி கூட்டத்தை கூட்டாத முதலமைச்சர், வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகளுக்கு எதிராக இக்கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தது ஏன் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மழை வெள்ள பாதிப்பு, ஊழல், விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினை போன்றவற்றிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் செயல்களில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் ஈடுபடுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதனை புரிந்துகொண்ட பல கட்சிகள் இக்கூட்டத்தை புறக்கணித்துள்ளதாகவும், தோல்வி பயத்தில் உள்ள கட்சிகள் மட்டுமே கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்தாமல், மக்களின் குறைகளை களைய முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க

வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

அரசு தொடக்கப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க திமுக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலம் முழுவதும் கல்வித்துறை அதிகாரிகள் இதுகுறித்து ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

பள்ளி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, குறைவான மாணவர்கள் உள்ள பள்ளிகளை ஒருங்கிணைப்பது போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திரு ராமதாசு, திமுக அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

வங்கக்கடலில் இன்று காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 45 Sec.)*

<<<<<>>>>>

பாரத ரத்னா சர்தார் வல்லப்பாய் பட்டேலின் பிறந்த தின கொண்டாட்டங்களின் ஒருபகுதியாக திருப்பூரில் நாளை ஒற்றுமை பேரணி

நடைபெற உள்ளதாக மாவட்ட இளையோர் அலுவலர் திரு ஜோயல் பிரபாகர் கூறியுள்ளார்.

இன்று திருப்பூரில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Voice Byte – ஜோயல் பிரபாகர் - 53 Sec. )*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்டம் அயனம்பாக்கம் கிராமத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்த இரண்டு குழந்தைகளின் பெற்றோருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவியை தமிழக அரசு அறிவித்துள்ளது.

-----------

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் 37 கோடி ரூபாய் செலவில் தார் சாலை அமைக்கும் பணியினை மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் அரசு மருத்துவமனையில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

-----------------

மதுரை மாவட்டத்தில் பரிதிமாற் கலைஞர் நினைவு தினத்தை முன்னிட்டு விளாச்சேரி கிராமத்தில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு ஆட்சியர் திரு பிரவீன்குமார் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

-----------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களுக்கு நாளையும், நாளை மறுநாளும் வீடுகளுக்கே சென்று பொருட்கள் விநியோகம் செய்யப்படும் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

Hobart-ல் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த ஆஸ்திரேலியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 186 ரன் எடுத்தது.

187 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பேட் செய்த இந்தியா 18 புள்ளி மூன்று ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 188 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

வாஷிங்டன் சுந்தர் அதிரடியாக ஆடி 23 பந்துகளில் 49 ரன் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில் இதுவரை இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்று சமநிலையில் உள்ளன.

----------

*உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா – தென்னாப்பிரிக்கா இடையேயான இறுதியாட்டம் மழையினால் தாமதமாக தொடங்கியது.*

*நவிமும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பந்துவீச தீரமானித்தது.*

*இதனையடுத்து பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 25 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 151 ரன் எடுத்துள்ளது.*

*<<<<<END>>>>>*